## இஸ்திகாரா தொழுகையின் துஆ

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْتَخِيْرُكَ بِعِلْمِكَ ، وَاَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ ، وَاَسْاَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيْمِ . فَاِنَّكَ
تَقْدِرُ وَلَا اَقْدِرُ ، وَتَعْلَمُ وَلَا اَعْلَمُ ، وَاَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ ، اَللّٰهُمَّ اِنْ كُنْتَ تَعْلَمُ اَنَّ هٰذَا الْاَمْرَ
خَيْرٌ لِّيْ فِيْ دِيْنِيْ وَدُنْيَايَ وَعَاقِبَةِ اَمْرِيْ وَعَاجِلِهٖ وَآجِلِهٖ فَقَدِّرْهُ لِيْ ، وَيَسِّرْهُ لِيْ ثُمَّ بَارِكْ لِيْ فِيْهِ ،
ثُمَّ يَسِّرْهُ لِيْ ، وَاِنْ كُنْتَ تَعْلَمُ اَنَّ هٰذَا الْاَمْرَ شَرٌّ لِّيْ فِيْ دِيْنِيْ وَدُنْيَايَ وَعَاقِبَةِ اَمْرِيْ وَعَاجِلِهٖ
وَآجِلِهٖ فَاصْرِفْنِيْ عَنْهُ ، وَاصْرِفْهُ عَنِّيْ ، وَاقْدِرْ لِيَ الْخَيْرَ اَيْنَمَا كَانَ اِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ .

**பொருள்:**

யா அல்லாஹ்! உன்னுடைய அறிவின் பொருட்டால் நான் உன்னிடம் நன்மையை வேண்டுகிறேன். உனது ஆற்றலின் பொருட்டால் உன்னிடம் ஆற்றலைத் தேடுகிறேன்.உன்னுடைய மகாத்தான அருளிலிருந்து உன்னிடம் நான் கேட்கிறேன். நிச்சயமாக நீ(எல்லாப் பொருட்களின் மீதும்) ஆற்றல் பெறுவாய். நான் (எதற்கும்) ஆற்றல் பெற மாட்டேன். நீ (அனைத்தையும்) அறிந்துள்ளாய். நான் (எதனையும்) அறிய மாட்டேன். நீ மறைவானவற்றை நன்கு அறிந்தவனாய் இருக்கிறாய். யா அல்லாஹ்! **இந்த செயல்** எனக்கு என்'னுடைய தீனிலும் என்னுடைய வாழ்விலும் என் செயலின் முடிவிலும் நன்மையாக இருக்குமென நீ அறிந்திருந்தால் அதற்கு எனக்கு நீ ஆற்றலளித்து அதனை எனக்கு எளிதாக்கி வைத்து, பிறகு அதில் எனக்கு நீ பரக்கத்துச் செய்வாயாக! **இந்தச் செயல்** எனக்கு என்னுடைய தீனிலும் என்னுடைய வாழ்விலும் என் செயலின் முடிவிலும் தீமையாக இருக்குமென நீ அறிந்திருந்தால் அதனை என்னை விட்டும் நீ திருப்பிவிடுவாயாக! என்னையும் அதனை விட்டும் திருப்பி விடுவாயாக! நன்மை எங்கிருந்தாலும் அதனைச் செய்ய எனக்கு ஆற்றலளிப்பாயாக! பிறகு அதனைக் கொண்டு என்னைப் பொருந்திக் கொள்ளச் செய்வாயாக!

www.sufimanzil.org